நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேட்டூர் அணை நீர் திறப்பு அதிகரிப்பு**

First Published : 08 Sep 2011 08:42:11 AM IST

மேட்டூர், செப். 7: மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறந்து விடப்படும் நீரின் அளவு புதன்கிழமை காலை முதல் விநாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன் விநாடிக்கு 15 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்பட்டிருந்தது. பாசனப் பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதால், மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை மாலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 95.33 அடியாக இருந்தது. அணையின் நீர்வரத்து விநாடிக்கு 39,240 கனஅடியாக இருந்தது. நீர் இருப்பு 58.95 டிஎம்சி.

கர்நாடக மாநிலத்தில் பெய்யும் மழையின் அளவு குறைந்துள்ளதால், மேட்டூர் அணையின் நீர்வரத்தும் குறைந்துள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 86.50 அடி**

First Published : 08 Sep 2011 07:33:09 AM IST

ஈரோடு, செப்.7: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 86.50 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 3 ஆயிரத்து 922 கனஅடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 400 கனஅடி, வாய்க்காலில் விநாடிக்கு 2 ஆயிரத்து 300 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 19.30 டிஎம்சி.

**தில்லியில் கடும் நிலநடுக்கம்**

First Published : 08 Sep 2011 12:05:59 AM IST




புதுதில்லி, செப்.8: புதுதில்லி மற்றும் சுற்றுப் பகுதிகளில் புதன்கிழமை இரவு 11.30க்கு கடும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

ரிக்டர் அளவில் 6.6 ஆகப் பதிவான இந்த நிலநடுக்கம் குறித்து உடனடியாகத் தகவல்கள் வெளிவரவில்லை. இரவு நேரம் என்பதால் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள். ஏற்கெனவே இன்று காலை நிகழ்ந்த குண்டுவெடிப்பில் பீதியில் உறைந்து போன மக்களுக்கு மேலும் பீதியை ஏற்படுத்தியுள்ளது இந்த நிலநடுக்கம். வீதிகளுக்கு வந்த மக்கள், அச்சத்துடன் பொழுதைக் கழிக்கின்றனர்.

# தினமலர்

**தேவையான அளவு கையிருப்பில் அரிசி, கோதுமை : மத்திய உணவுக்கழகம் அறிவிப்பு**

செப்டம்பர் 08,2011,09:15

---



சென்னை: தமிழகம், புதுவைக்கு தேவையான அரிசி, கோதுமை கையிருப்பில் உள்ளதாக, மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்திய உணவுப்பொருள் வழங்கல் கழக பொதுமேலாளர் ஜெகதீசன்

வெளியிட்ட செய்திக்குறிப்பு: பொது வினியோக முறை (ரேஷன்)யில் உணவுப்பொருள் வழங்குவதற்கான உணவுப்பொருட்கள், தேவையான அளவுக்கு, மத்திய உணவுப்பொருட்கள் கழக குடோன்களில் கையிருப்பு உள்ளது. ஆகஸ்ட் 31 நிலவரப்படி, கோதுமை ஒரு லட்சத்து 93 ஆயிரத்து, 662 டன் அளவிலும், அரிசி 8 லட்சத்து, 39 ஆயிரத்து 793 டன் அளவிலும் கையிருப்பு உள்ளது. ஆகஸ்ட் மாதத்தில், தமிழகத்திற்கு 31 ஆயிரத்து 677 டன் கோதுமை, 2 லட்சத்து 17 ஆயிரத்து 566 டன் அரிசியும் வினியோகிக்கப்பட்டுள்ளது. புதுவைக்கு 4,206 டன் அரிசி சப்ளையாகியுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தென்னை மரங்களில் கேரள வாடல் நோய் :உடுமலை விவசாயிகள் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2011,02:21 IST

உடுமலை : உடுமலை பகுதியில் தென்னை மரங்களில் கடும் சேதம் ஏற்படுத்தும் கேரள வாடல் நோய் முதன்முதலாக கண்டறியப்பட்டுள்ளது, விவசாயிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஒரு லட்சம் ஏக்கர் வரை தென்னை பயிரிடப்பட்டுள்ளது.

சீதோஷ்ண நிலை மாற்றம் உட்பட பல்வேறு காரணங்களால் நத்தை புழு தாக்குதல், இலை கருகல் போன்ற நோய் தாக்குதல்கள் தென்னை சாகுபடியில் ஏற்படும். இந்நிலையில் உடுமலை அருகே மூங்கில்தொழுவில், விவசாயி மாசிலாமணி தோட்டத்திலுள்ள தென்னை மரங்களில் மர்மநோய் பரவி மரங்கள் கருகின.

ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் விஞ்ஞானி ராஜமாணிக்கம், பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் ஜான்சன், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான குழுவினர் நேற்று பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வில், இப்பகுதி தென்னை மரங்களில் கேரளா வாடல் நோய் பரவி வருவது கண்டுபிடிக்கப்பட்டது. ஆய்வுக்குழுவினர் கூறியதாவது: கேரளாவில் கடந்த 1930ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட வாடல் நோய் தாக்குதலை முழுமையாக தீர்க்க மருந்துகள் இதுவரை கண்டறியப்படவில்லை.

இந்நோய்த்தாக்குதல் அம்மாநிலத்தில் கடும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. நோயை கட்டுப்படுத்த முடியாமல் மரங்கள் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டன.

தமிழ்நாட்டில், போடி, கம்பம், மணக்கடவு பகுதியில் தாக்குதல் காணப்பட்டு நோயின் வீரியத்தை குறைப்பதற்கான தொழில் நுட்பங்கள் மட்டும் செயல்படுத்தப்படுகிறது. உடுமலை பகுதியில் முதன்முதலாக இந்த வாடல் நோய் கண்டறியப்பட்டுள்ளது.

மூங்கில்தொழுவு பகுதியில் 50க்கும் அதிகமான மரங்களில் நோய்த்தாக்குதல் தீவிரமாக காணப்படுகிறது. வாடல் நோயை பரப்பும் பூச்சிகள் மரத்தின் நீர் கடத்தும் திறனை முடக்கும். இதனால், ஓலைகள் மஞ்சள் நிறத்திற்கு மாறி இலை மற்றும் குருத்து அழுகும். சத்து இல்லாமல் காய்ப்பு குறைந்து மரம் வெறுமையாக நிற்கும். பல ஆண்டுகள் மரம் பட்டுப்போகாமல் நின்றாலும் எவ்வித பலனும் அளிக்காது.

கேரளா வாடல் நோய்க்கு முழுமையான தீர்வு கிடைக்காததால், கேரளாவிலுள்ள காசர்கோடு, காயங்குளம் மத்திய பணப்பயிர் ஆராய்ச்சி நிலையங்களில் இந்நோய் தாக்குதல் ஏற்படாமல் வளரும் புதிய தென்னை ரகங்களை உருவாக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது, என்றனர். தென்னை மரங்களில் கேரளா வாடல் நோய் கண்டறியப்பட்டுள்ளதால் உடுமலை பகுதி விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

### பொட்டாஷ் தட்டுப்பாட்டை போக்க 280 டன் அனுமதி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2011,22:35 IST

கம்பம் : பொட்டாஷ் தட்டுப்பாட்டை போக்க, முதற்கட்டமாக 280 டன் பொட்டாஷ் மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இணை இயக்குனர் இமாம்தீன் கூறியதாவது: பெரியாறு பாசனத்தில் 14 ஆயிரம் ஏக்கரில், இருபோகம் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. வாழை, திராட்சை, பருத்தி, மா, கொய்யா, கொட்டை முந்திரி என தோட்டக்கலை பயிர்கள் அதிகம் சாகுபடியாகிறது. இவற்றிற்கு பொட்டாஷ் தேவை அதிகம் உள்ளது.

தற்போது முதல் போக சாகுபடிக்கு நாற்றுகள் நடவு செய்து ஒரு மாதத்தை கடந்துள்ளது. யூரியாவுடன் பொட்டாஷ் கலந்து மேலுரமாக இட வேண்டும்.

மிளகாய், தக்காளி பயிர்களுக்கும் பொட்டாஷ் தேவைப்படுகிறது. சில வாரங்களாக பொட்டாஷ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடைகளில் பொட்டாஷ் இருப்பு இல்லை. இதனால் விவசாயிகள் அவதிப்பட்டனர்.

இதையடுத்து மாவட்டத்திற்கு 700 டன் பொட்டாஷ் வழங்க அரசு உத்தரவிட்டது. முதற்கட்டமாக 280 டன் பொட்டாஷ் வழங்கப்படுவதாக, விவசாயத்துறை இணை இயக்குனர் இமாம்தீன் தெரிவித்தார்.

## *ஐ.நா. அமைப்பு மதிப்பீடு: 2011 காலண்டர் ஆண்டில் உலக பொருளாதார வளர்ச்சி 3.1 சதவீதமாக சரிவடையும் இந்திய பொருளாதாரம் 8.1 சதவீதம் வளர்ச்சி அடையும்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*உலக பொருளாதார வளர்ச்சி, 2011 காலண்டர் ஆண்டில், 3.1 சதவீதமாக சரிவடையும் என ஐ.நா. சபையின் வர்த்தக மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது. இது, 2010–ஆம் ஆண்டில் 3.9 சதவீதமாக இருந்தது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, 8.6 சதவீதத்திலிருந்து 8.1 சதவீதமாக குறையும். அமெரிக்காவின் வளர்ச்சி 2.9*

சதவீத்திலிருந்து 2.3 சதவீதமாக சரிவடையும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் நாடுகள்

கடந்த 2008–ஆம் ஆண்டில் உலக பொருளாதாரத்தில் கடும் தேக்கநிலை உருவானது. அவ்வாண்டுக்கு முன் வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரம் 6 சதவீதம் வளர்ச்சி கண்டிருந்தது. நடப்பு ஆண்டில் இந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி இதே அளவிற்கு இருக்கும்.

அதே சமயம் வளர்ச்சி அடைந்த நாடுகளின் பொருளாதாரம் 1.5 முதல் 2 சதவீத அளவிற்கே முன்னேற்றம் காண வாய்ப்புள்ளது என ஐ.நா. சபையின் அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. உலகிலேயே, இந்தியா முக்கிய அங்கம் வகிக்கும் தெற்கு ஆசிய பகுதியில்தான் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நடப்பு ஆண்டில் தெற்கு ஆசியாவின் பொருளாதாரம் 7 சதவீதம் வளர்ச்சி அடையும் என இவ்வமைப்பு எதிர்பார்க்கிறது.

வளர்ந்து வரும் நாடுகள் பொதுவாக உள்நாட்டு பொருளாதாரத்தையே இலக்காகக் கொண்டுள்ளன. ஏற்றுமதியை அதிகம் சார்ந்திருப்பதில்லை. எனினும் வளர்ச்சி அடைந்த நாடுகளின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை இந்த நாடுகளின் முன்னேற்றத்திலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரிகிறது.

2008–ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகப் பெரும் மந்தநிலையால் இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி நடவடிக்கைகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. ஏனென்றால் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற முக்கிய சந்தைகளில் பல்வேறு பொருள்களுக்கான தேவைப்பாடு கணிசமாக குறைந்தது. நடப்பு ஆண்டிலும் இந்தியா போன்ற நாடுகளின் ஏற்றுமதியில் பாதிப்பு ஏற்படலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் இந்த நாடுகளில் அத்தியாவசியப் பொருள்களின் விலையும் உயரும் நிலை உள்ளது.

அமெரிக்காவில் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான தேவைப்பாடு சரிவடையத் தொடங்கியுள்ளது. அங்கு சம்பள விகிதங்கள் உயராமல் தேக்கமடைந்து விட்டன. வேலைவாய்ப்புகளும் குறையும் நிலை உருவாகியுள்ளது. அரசு கடன்பத்திரங்களுக்கான தகுதியும் குறைக்கப்பட்டு விட்டது. இவை உலக பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவை ஏற்படுத்த உள்ளன.

சர்வதேச வர்த்தகம்

2010–ஆம் ஆண்டில் சர்வதேச வர்த்தகம் (ஏற்றுமதி + இறக்குமதி) அளவு அடிப்படையில் 14 சதவீதம் அதிகரித்திருந்தது. இது, நடப்பு ஆண்டில் ஒற்றை இலக்க

வளர்ச்சியையே எட்டும். குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளின் வர்த்தக வளர்ச்சியில்தான் அதிக சரிவு ஏற்படும். இதுவரை, பணக்கார நாடுகளைக் காட்டிலும் வளர்ந்து வரும் நாடுகளில்தான் ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளில் மீண்டும் விறுவிறுப்பு ஏற்பட்டுள்ளது என அண்மைக் கால ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.